**கொத்மலை பிரதேச சபை**
**நுவரெலிய மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொத்மலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் இல்லாத லெமினேடர் இயந்திரத்தின் பெறுமதி ரூபா 94,900 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் இயந்திரம் மற்றும் இயந்திரங்கள் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு உரித்தாக இருந்த ரூபா 30,000 பெறுமதியான ஒலிபெருக்கி உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்தை விஞ்சிய காலம் கடந்திருந்த பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,054,334 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்தை விஞ்சிய காலம் கடந்திருந்த நிர்மாணக் கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,717,714 ஆன மீதியொன்று காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

உரித்து உறுதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 52,808,348 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்களின் மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கொத்மலே பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் இறுதியாக வீதவரி 2011 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,290,001 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 24,420,600 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது இணக்கமின்மைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 4,142,000 | 4,468,779 | 4,038,161 | 2,144,546 | 4,075,000 | 3,638,260 | 3,183,437 | 1,274,432 |
| வாடகை | 3,990,000 | 3,582,536 | 5,450,203 | 196,775 | 3,727,300 | 3,806,879 | 3,632,584 | 142,345 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 6,940,000 | 5,523,998 | 5,523,998 | - | 7,132,000 | 5,294,786 | 5,294,786 | - |
| ஏனைய வருமானம் | 11,800,000 | 3,592,926 | 6,573,310 | 1,860,153 | 12,565,700 | 11,345,774 | 10,217,484 | 4,911,930 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### (அ) ஆதனவரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி வருமானம் ரூபா 1,555,241 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 798,505 தொகை 01 வருட காலத்திற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

**(ஆ) வாடகை**

----------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாத நிலுவை வாடகை வருமானம் ரூபா 196,775 ஆக இருந்தது.

**(இ) நீர்க் கட்டணங்கள்**

-------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாத நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 589,305 ஆக இருந்தது.

**(ஈ) ஏனைய வருமானம்**

-------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாத ஏனைய வருமானம் ரூபா 3,119,747 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.1 செயலாற்றுகை

------------------------------

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள்**

----------------------------------------------------------------

பிரதேச சபையினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரதஹல்கொட மற்றும் ஷீன் நீர் ஆகிய இரண்டு முன்மொழிவுத் திட்டங்களுக்காக முறையே ரூபா 1,897,315 மற்றும் ரூபா 1,083,915 செலவிடப்பட்டு குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த நீர் முன்மொழிவுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

----------------------------------------------------------

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருள் வெளியேற்றப்படும் கொஸ்கஹபத்தன மற்றும் ஹபுகஸ்தவாவ கழிவு பொருள் அகற்றும் இடங்களில் திறந்த வெளியில் கழிவுகள் இடப்பட்டிருந்தமை மற்றும் பொலித்தீன் உட்பட கழிவுப்பொருள் முறையாக அகற்றுதல் இடம்பெறாமை அவதானிக்கப்பட்டது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

------------------------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பான பிரதேச சபை போதியளவில் அறியாமல் இருந்ததுடன் அதற்காக 2017 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 2,287,140 ஆன உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்கீழ் ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்துவதற்காக தவலந்தன்ன மற்றும் ஹரங்கல பிரதேசங்களில் பொது மலசலகூடங்கள் அமைத்தல் இடம்பெற்று வந்தது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------

(அ) ரம்பொடை நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்காக போதியளவில் வசதிகள் இல்லாமையால் மலசலகூட வசதிகள் வழங்குவதற்காக 2017 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 55,000 கொடுப்பனவு செய்து 02 மலக் கழிவுகளை அகற்றும்

தாங்கிகள் (Septic Tank) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அத்தாங்கி உரிய இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் இனங்காணப்பட்டிருந்த 96 அனுமதிற்ற நிர்மாணங்கள காணப்பட்டதுடன் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்களின் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள்**

பிரதேச சபைக்குரிய உப அலுவலகங்களின் மற்றும் இரண்டு நூலகங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் இருந்ததுடன் அவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சில உப அலுவலகங்கள் பாதுகாப்பற்ற நிலைமையில் காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.3.2 விளைவற்ற சொத்துக்கள்**

(அ) 2016 ஆம் ஆண்டின் மாகாண சபை உறுப்பினர் உதவியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 478,500 ஆன பெறுமதியான 330 கூரைத் தகடுகள் உரிய நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் பிரதான அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச சபைக்குரிய பிணியாளர் ஊர்தியொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் பயன்பாட்டிலிருந்து ஓரமாக்கப்பட்டு 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கடந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) போகலவத்த கலப்பிட்டிய வீதி அபிவிருத்தி செய்யும் போது சபைக்குரிய பழைய நீர் முறைமைக்காக பயன்படுத்தியிருந்த 4 அங்குல விட்டமுள்ள வெவ்வேறு அளவிலான 51 நீர்க் குழாய்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் அவற்றை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் மல்தெனிய அரச விடுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு செலவுகள், மற்றும் உள்ளவாறான செலவுகளுடன் ஒப்பீடு செய்த செய்யும் போது 08 வருமான விடயங்களில் 11 சதவீதம் முதல் 357 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் ஆவணங்கள் நாளது வரையாக பேணப்படாமைசபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| சொத்துக்கள் / ஆதனங்கள் | ஆவணங்களுக்கு உட்படுத்தாமை, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை. |
| இருப்புக்கள் | இருப்புக்களை வழங்காமல் தடுத்து வைத்தல். |
| ஒப்பந்தங்கள் | நியமிக்கப்பட்ட அளவை விஞ்சி கொடுப்பனவு செய்தல் |